# எங்களுக்கு அனுப்ப வேண்டிய ஆவணங்களின் பட்டியல் (இறந்துள்ள ஆனால் ஒரு முஸ்லிமாக இல்லாத யாரேனும் ஒருவருக்காக)

**பகுதி** A - **உரிமை பெற்றுள்ள பயனாளர்களின் பட்டியல்**

இறந்துள்ள நபர் சிங்கப்பூரைச் சேர்ந்தவர் எனில், மற்றும் அவர் ஒரு செல்லத்தக்க வாரிசுதாரர் நியமனத்தைச் செய்திருக்கவில்லை எனில், விருப்புறுதி இல்லா வாரிசுரிமைச் சட்டம் (அத்தியாயம் 146) -இல் வரையறுக்கப்பட்டுள்ள பகிர்ந்தளிப்பு விதிகளுக்கு இணங்க, அவர்களின் மசேநி பணத்தையும் அவர்களின் சொத்துக்களையும் பகிர்ந்தளிப்போம்.

| | **இறந்தவருடைய நபர்:** | **பகிர்ந்தளிப்பதற்கான விதிகள்** | **எங்களுக்குத் தேவைப்படும் ஆவணங்கள்** (**பின்வரும் பக்கத்தில் உள்ள அட்டவணைகளைப் பார்க்கவும்**) |
|---|---|---|---|
| 1 | **கணவர் அல்லது மனைவி**<br>குழந்தைகள் இல்லை<br>பெற்றோர் இல்லை | உயிருடன் உள்ள கணவர் அல்லது மனைவிக்கு முழுப் பங்கு. | - அட்டவணை 1, 2<br>- அட்டவணை 3 எண் 1, 4 |
| 2 | **கணவர் அல்லது மனைவி**<br>**குழந்தைகள்** | உயிருடன் உள்ள கணவர் அல்லது மனைவிக்குப் பாதிப் பங்கு.<br>மீதமுள்ள பாதிப் பங்கு பிள்ளைகளுக்குச் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். ஆனால், அவர்கள் ஏற்கெனவே இறந்துவிட்டிருந்தால், அவர்களின் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.<br>பெற்றோர்களுக்கு உரிமையில்லை. | - அட்டவணை 1, 2<br>- அட்டவணை 3 எண் 1, 2, 3 |
| 3 | **குழந்தைகள்**<br>கணவர் அல்லது மனைவி இல்லை | மொத்தப் பங்கும் பிள்ளைகளுக்குச் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். ஆனால், அவர்கள் ஏற்கெனவே இறந்துவிட்டிருந்தால், அவர்களின் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.<br>பெற்றோர்களுக்க உரிமையில்லை. | - அட்டவணை 1, 2<br>- அட்டவணை 3 எண் 2, 3 |
| 4 | **கணவர் அல்லது மனைவி**<br>**பெற்றோர்**<br>குழந்தைகள் இல்லை | உயிருடன் உள்ள கணவர் அல்லது மனைவிக்கு பாதிப் பங்கு.<br>மீதமுள்ள பாதிப் பங்கு உயிருடன் உள்ள பெற்றோர்களுக்குச் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். | - அட்டவணை 1, 2<br>-அட்டவணை 3 எண் 1, 4 |
| 5 | **பெற்றோர்கள்**<br>கணவர் அல்லது மனைவி இல்லை<br>குழந்தைகள் இல்லை | முழுப் பங்கும் உயிருடன் உள்ள பெற்றோர்களுக்குச் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். | - அட்டவணை 1, 2<br>-அட்டவணை 3 எண் 4 |
| 6 | **சகோதரர் அல்லது சகோதரி**<br>கணவர் அல்லது மனைவி இல்லை<br>குழந்தைகள் இல்லை<br>பெற்றோர்கள் இல்லை | மொத்தப் பங்கும் இறந்தவரின் சகோதர்கள் மற்றும் சகோதரிகளுக்குச் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். ஆனால், அவர்கள் ஏற்கெனவே இறந்துவிட்டிருந்தால், அவர்களின் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். | - அட்டவணை 1, 2<br>-அட்டவணை 3 எண் 4, 5, 6 |
| 7 | **பாட்டன்-பாட்டிகள்**<br>கணவர் அல்லது மனைவி இல்லை<br>குழந்தைகள் இல்லை<br>பெற்றோர்கள் இல்லை<br>சகோதரர்கள் அல்லது சகோதரிகள் இல்லை | முழுப் பங்கும் உயிருடன் உள்ள பாட்டன்-பாட்டிகளுக்குச் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். | - அட்டவணை 1, 2<br>-அட்டவணை 3 எண் 4<br>-வழக்கு அதிகாரியால் கோரப்படும் கூடுதல் ஆவணங்கள் |
| 8 | **மாமாக்கள் மற்றும் அத்தைகள்**<br>கணவர் அல்லது மனைவி இல்லை<br>குழந்தைகள் இல்லை<br>பெற்றோர்கள் இல்லை<br>சகோதரர்கள் அல்லது சகோதரிகள் இல்லை<br>தாத்தா-பாட்டிகள் இல்லை | முழுப் பங்கும் உயிருடன் உள்ள மாமாக்கள் மற்றும் அத்தைகளுக்குச் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். | - அட்டவணை 1, 2<br>-அட்டவணை 3 எண் 4<br>-கூடுதல் ஆவணங்கள் அவசியமெனில், உங்களின் வழக்கு அதிகாரி உங்களுக்குத் தெரிவிப்பார் |

இப்பட்டியல் ஒரு பொதுவான வழிகாட்டியாகும். உங்களின் வழக்கு அதிகாரி மேல் சான்றாவணங்களுக்காக உங்களைத் தொடர்புகொள்ளக்கூடும்.
குழந்தை என்பது ஒரு பிள்ளையையும் (முறையான வழியில் அல்லது சட்டப்பூர்வமாக தத்தெடுக்கப்பட்டவர்), இறந்த பிள்ளையின் சந்ததியினரையும் குறிக்கிறது.

**பகுதி** B - **ஆவணங்களின் அட்டவணை**

உங்களின் நிறைவுசெய்த கணினிவழியான விண்ணப்பப் படிவத்துடன், பின்வரும் ஆவணங்களின் அச்சுநகலையும் எங்களிடம் சமர்ப்பிக்கவும்.

**அட்டவணை** 1 - **எங்களிடம் கட்டாயம் இருக்க வேண்டிய ஆவணங்கள்**

1) இறந்தவரின் மரணச் சான்றிதழ்
2) எங்களுக்கு கணினிவழியான விண்ணப்பப் படிவத்தை அனுப்பிய நபர் உள்ளிட்ட எல்லா பயனாளர்களின் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சமூகப் பாதுகாப்பு அட்டை (அமெரிக்க நாட்டவர்களுக்காக), வாக்காளர் அடையாள அட்டை (இந்திய நட்டவர்களுக்காக)
3) கட்டணம் மின்னணு முறையில் செய்யப்படுவதால், PayNow (பெறுநரின் NRIC உடன் பதிவு செய்யப்பட வேண்டும்) அல்லது நேரடி வங்கி பரிமாற்றத்தின் மூலம் பணம் பெறுவதை நீங்கள் தேர்வு செய்யலாம். நேரடி வங்கி பரிமாற்றத்தின் மூலம் பணம் பெற, நீங்கள் வங்கி பாஸ் புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகலை சமர்ப்பிக்க வேண்டும் அல்லது வங்கி அறிக்கையின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.
   (**குறிப்பு**: மூன்றாம் தரப்பு வங்கிக் கணக்கிற்கு நேரடி வங்கி பரிமாற்றத்தின் மூலம் பணம் பெற நீங்கள் தேர்வுசெய்தால், பயனாளி மற்றும் கணக்கு வைத்திருப்பவர்கள் படிவம் 15 எனப்படும் இழப்பீட்டு படிவத்தை செயல்படுத்த வேண்டும். எங்கள் வலைத்தளத்திலிருந்து https://pto.mlaw.gov.sg/deceased-cpf-estate-monies/forms/ இலிருந்து 15 படிவத்தைப் பதிவிறக்கலாம். )
4) இறந்தவருடைய சட்டப்பூர்வ வாரிசுகளின் விவரங்களை வழங்குகின்ற முறையான அதிகாரியிடமிருந்து உறுதிமொழி அல்லது நற்சான்று (அவர் சிங்கப்பூரைச் சேர்ந்தவர் இல்லை என்றால்)

**அட்டவணை** 2 - **இறந்தவருக்கு முன்னதாகத் திருமணமாகியிருந்தால், எங்களுக்குத் தேவைப்படும் ஆவணங்கள்**

1) தற்சார்பான பின்னுறுதித் தீர்ப்பாணை (இறந்தவருக்கு முன்னதாக விவாகரத்தாகியிருந்தால்)
2) கணவர் அல்லது மனைவியின் மரணச் சான்றிதழ் (இறந்தவர் ஒரு விதவையாக அல்லது துணையை இழந்தவராக இருந்திருந்தால்)

**அட்டவணை** 3 - **கூடுதல் ஆவணங்கள்**

| | **இறந்தவருடனான உறவுமுறை** | **நீங்கள் அளிக்க வேண்டிய ஆவணங்கள்** |
|---|---|---|
| 1 | கணவர் அல்லது மனைவி | a) இறந்தவருடனான (மரணமடைந்தவர்) திருமணச் சான்றிதழ் |
| 2 | குழந்தை | a) இறந்தவரின் திருமணச் சான்றிதழ்<br>b) இறந்தவருடைய எல்லா பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்<br>c) ஏதேனும் குழந்தையைத் தத்தெடுத்திருந்தால், தத்தெடுத்தல் ஆவணங்கள்<br>d) பிள்ளை யாரேனும் இறந்துவிட்டிருந்தால், அவரின் மரணச் சான்றிதழ் |
| 3 | பேரப்பிள்ளை (இறந்தவரின் பிள்ளை ஏற்கெனவே இறந்துவிட்டிருந்து, அவர் பெற்றோராக இருந்தால்) | a) இறந்தவருடைய பிள்ளையின் திருமணச் சான்றிதழ்<br>b) இறந்தவருடைய பிள்ளையின் எல்லா பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்<br>c) இறந்தவருடைய பிள்ளை ஏதேனும் குழந்தையைத் தத்தெடுத்திருந்தால், தத்தெடுத்தல் ஆவணங்கள்<br>d) இறந்தவருடைய பிள்ளையின் ஏதேனும் பிள்ளையினுடைய மரணச் சான்றிதழ் (அவரது பிள்ளை இறந்துவிட்டிருந்தால்) |
| 4 | பெற்றோர் | a) இறந்தவரின் பிறப்புச் சான்றிதழ்<br>b) பெற்றோர்களின் திருமணச் சான்றிதழ்<br>c) பெற்றோர் யாரேனும் இறந்துவிட்டிருந்தால், அவரது மரணச் சான்றிதழ் |
| 5 | சகோதரர் அல்லது சகோதரி | a) இறந்தவரின் பிறப்புச் சான்றிதழ்<br>b) பெற்றோர்களின் திருமணச் சான்றிதழ்<br>c) சகோதரர்கள் அல்லது சகோதரிகளின் பிறப்புச் சான்றிதழ்கள்<br>d) யாரேனும் சகோதரர் அல்லது சகோதரி இறந்துவிட்டிருந்தால், அவரது மரணச் சான்றிதழ்<br>e) ஏதேனும் சகோதரர் மற்றும் சகோதரியைத் தத்தெடுத்திருந்தால், தத்தெடுத்தல் ஆவணங்கள் |
| 6 | சகோதரர் அல்லது சகோதரியின் பிள்ளை (சகோதரர் அல்லது சகோதர□ இறந்துவிட்டிருந்தால்) | a) சகோதரர் அல்லது சகோதரி இறந்துவிட்டிருந்தால், அவரது திருமணச் சான்றிதழ்<br>b) சகோதரர் அல்லது சகோதரி இறந்துவிட்டிருந்தால், அவரது எல்லா பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்<br>c) சகோதரர் அல்லது சகோதரி இறந்துவிட்டிருந்தால், அவர் தத்தெடுத்த யாரேனும் பிள்ளையின் தத்தெடுத்தல் ஆவணங்கள்<br>d) இறந்துவிட்ட சகோதரர் அல்லது சகோதரியின் யாரேனும் பிள்ளையின் மரணச் சான்றிதழ் (அந்தப் பிள்ளையும் இறந்துவிட்டிருந்தால்) |